# திருமுருகாற்றுப்படை முன்னிறுத்தும் முருகச்சிந்தனைகள்

11

**முனைவர்.வே.வளர்மதி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி) ஈரோடு – 638 316.**

**ஆய்வுச் சுருக்கம்**

திருமுருகாற்றுப்படை முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திரு ஆவினன்குடி (பழனி), திரு ஏரகம் (சுவாமிமலை), திருத்தணி (குன்றுதோடல்), பழமுதிர்ச்சோலை ஆகியன பற்றிக் கூறுகின்றது. திருப்பரங்குன்றம் என்ற முதலாவது பகுதியில் முருகனின் திருவுருவச் சிறப்பு, முருகன் அணியும் மாலைகள், சூரமகளிர் செயல்கள், முருகன் சூரனைச் சங்காரம் செய்த திறன், மதுரையின் பெருமை, திருப்பரங்குன்றத்தின் இயற்கை அழகு ஆகியன எடுத்துக்காட்டப்படுகின்றன. திருச்சீரலைவாய் என்ற இரண்டாம் பகுதியில் முருகன் அடியார்க்கு அருள் புரிய எழுந்தருளும் யானையின் இயல்பு, முருகனின் ஆறு திருமுகங்கள் ஆற்றும் செயல்கள். பன்னிரு திருக்கரங்கள் ஆற்றும் செயல்கள், முருகன் எழுந்தருளியிருக்கும் தோற்றம் என்பன சொல்லப்படுகின்றன. திருஆவினன்குடி என்ற மூன்றாம் பகுதியில் முருகனை வழிபடும் முனிவர்கள், தேவருடன் முருகனை வழிபட வரும் மகளிர் வனப்பும் ஏனையவர்கள் பற்றிய செய்திகளும் உள்ளன. திரு ஏரகம் என்ற நான்காம் பகுதியில் அந்தணர்களின் இயல்பும், அவர்கள் முருகனை வழிபடும் முறைமையும் கூறப்பட்டுள்ளன. குன்றுதோறாடல் என்ற ஐந்தாம் பகுதியில் குன்றக்குரவை நிகழ்ச்சி, முருகனை வணங்க வரும் பாடுமகளிர் ஆடுமகளிர் மாண்புகள் அவர்களின் சிறப்புக்கள் ஆகியனவும் பழமுதிர்ச்சோலை என்ற ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளியிருக்கும் இடங்கள், அதற்கு ஆற்றுப்படுத்தும் முறை, முருகனின் அருள்பெறும் வழி, அவன் அருள் புரியும் வகை, பழமுதிர்ச்சோலையில் உள்ள அருவியின் சிறப்பு ஆகியன விதந்துரைக்கப்படுகின்றன.

**முன்னுரை**

சங்க காலத்தில் நம் முன்னோர்கள் வாழ்ந்த சீர்மிகு வாழ்வை அக்காலப் புலவர் பெருமக்கள் அழகு தமிழில் வடித்த அழியாப் பொக்கிஷங்களே சங்க இலக்கியங்களாகும். உலக அரங்கிலே செம்மொழியென உயர்வாகபட பேசக்கூடிய அளவிற்கு நம் தமிழ் இலக்கியங்கள் கற்போர் நாவில் களிநடம் புரியக் காண்கிறோம். காலங்காலமாக மொழியில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டாலும் இலக்கியக் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்துவதாகவும் அன்றலர்ந்த மலர்களாகவும் மணம் வீசி வருகின்றன. அம்மலர்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழும் மலர்களாக ஆற்றுப்படை இலக்கியங்களாகச் சுட்டலாம். அதிலும் நக்கீரரால் இயற்றப்பட்ட திருமுருகாற்றுப்படை பக்திச் சுவை நனி சொட்டச்

சொட்ட உலகில் பவனி வருவதைக் காணலாம்.

**திருமுருகாற்றுப்படையில் முருகன்**

தொல்காப்பியர் ஐவகை திணைகளாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றை ஐவகை நிலங்களாகக் குறிப்பிடுவர். குறிஞ்சிக்கு முருகனை திணைநிலைக் கடவுளராகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். திணை நில மக்கள் என்ற கோட்பாட்டிற்கேற்பத் திணை நிலைத் தெய்வங்கள் அவ்வத் திணை நிலை மக்களால் மட்டுமே போற்றி வழிபடப்பட்டனர். குறிஞ்சி நில மக்களின் வழிபாடு குன்றக்குரவை. குறிப்பிட்ட ஓர் இனமக்களுக்குரிய தெய்வமாக முருகன் விளங்கினான் என்ற குறிப்புத் தொல்காப்பியத்தால் பெறப்படுகிறது. தொல்காப்பியர் முருகனைச் சேயோன் என்று கூறுகிறார்.

**"சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல். பொருள் : அகத்-951)**

முருகன் மேகம் சூழ்ந்த மலையுடைய குறிஞ்சி நிலத்தின் தலைவன். முருகன் மறக்கருணையாலும், அறக்கருணையாலும் உலகத்தை உய்விக்கின்றான் என்ற செய்தியைப் பல நூல்களும் குறிப்பிடுகின்றன. குறிப்பாக அவன் கைகள் மறக்கருணையைச் செய்வதற்கும், பாதங்கள் அறக்கருணையைச் செய்வதற்கும் உரியவையாகும் என்பதனை,

**"உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்**
**செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை" (திருமுருகா. பா – 4-5)**

என்ற அடிகளால் புலப்படும்.

**முருகாற்றுப்படையின் சிறப்புநிலை**

திருமுருகாற்றுப்படையில் வீடுபேறு பெற வேண்டுமென வேண்டிய சான்றோர் ஒருவரை, முருகன் திருவருளால் வீடுபேற்றுக்குரிய திருவடி ஞானம் கைவரப் பெற்ற சீவன் மூத்தரொருவர், முருகன்பால் அவரை ஆற்றுப்படுத்துகின்றார். வீடுபேற்றுக்குரிய திருவருள் ஞானத்தைக் குறைவர வழங்குதலில் தலைசிறந்து நிற்கும் திருக்குமரன் முருகப் பெருமான். ஆதலால் ஆற்றுப்படைக்குப் பொருத்தமாகின்ற வகையில் திகழ்கின்றது. இதனால் ஆற்றுப்படை திருமுருகாற்றுப்படை என்று வழங்கப்படுகின்றது.

**முருகாற்றுப்படையின் கருப்பொருள்**

முருகப்பெருமான், காலை இளம்பரிதியின் ஒளிப்புனல் கடலில் படும் பொழுது தோன்றும் ஒளி பொருந்தியவன். தன்னை நாடி வருவோரைக் காக்கும் அழகு பொருந்தியது அவனது திருவடி திரு முடியில், சுடர்விட்டு ஒளிரும் காந்தள் மாலைச் சூடியுள்ள இனிய காட்சி காண்போர் நெஞ்சத்தைப் பரவசப்படுத்தும். சூரனை அடியோடு தொலைத்த நெடுவேல். அழியாத புகழ்பெற்றுச் செவ்வேல் ஏந்தும் இந்த முருகனுடைய செம்மை விளங்கும் திருவடியைச் சிறப்பாக விளக்குகிறது.

**முருகன் திரு உருவம்**

முருகப்பெருமானின் அழகிய உருவம் பற்றியும் அவரது திருவிளையாடல்கள் பற்றியும் சொற்சுவை, பொருட்சுவை கூட்டி சுந்தரத் தமிழில் இனிய எளிய முறையில் சிறப்பாக விளக்கி இருக்கும் பாடலைக் கீழே காண்போம்.

**"பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்**
**ஆர்வலர் ஏத்த அமர்ந்தின்று ஒழுகிக்**
**காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே, ஒருமுகம்**
**மந்திர விதியின் மரபுளி வாழஅ**
**அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே, ஒருமுகம்**
**செறுநரத் தேய்த்தும் செல்சமம் முருக்கிக்**
**கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே: ஒருமுகம்**
**குறவர்மடமகள் கொடிபோல் நுசும்பின்**
**மடல்வரல் வள்ளியோடு நகையமர்ந்தன்றே" (திருமுருகா 92-102)**

ஒருமுகம் சூரியனைப்போல் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. ஒருமுகம் தன்னை வணங்கும் அன்பர்களுக்கு வரம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஒருமுகம் அந்தணர்களின் வேள்விகளைப் பாதுகாக்கின்றது. ஒருமுகம் உண்மை அறிவை உணர்த்திக் கொண்டிருக்கிறது. ஒருமுகம் அன்பர்களின் பகைவர்களை அழித்து அவர்களுக்குப் போரிலே வெற்றியைத் தருகின்றது. ஒருமுகம் வள்ளியுடன் மகிழ்ந்து வார்த்தை விளையாடிக் கொண்டிருக்கின்றது என்று திருவுருவத்தைப் பற்றி நக்கீரர் மிக அழகாகப் பாடியிருக்கின்றார்.

**முருகப் பெருமானின் தோற்றப் பொலிவு**

முருகப் பெருமான் சிவந்த மேனியை உடையவன். சிவந்த அரையினன், காதில் அசோகின் தளிர் அசையபந் பெற்றவன், கச்சினன், சுழலினன், வெட்சி மாலையையுடையவன், சூழலும் கொம்பும் தோற்ற கருவிகளும் உடையவன். கிடாயும் மயிலுமுடையவன். கோழிக் கொடியோன், நெடியன், வளையணிந்த தோளையுடையவன் என்று நக்கீரர் தம் நூலில் கூறியுள்ளார். முருகப் பெருமானின் சிவந்த திருமேனிச் சிறப்பு,

**"செய்யன் சிவந்த ஆடையன், செவ்வரைக்**
**கொடியன் நெடியன் தொடியண்டி தோலின்" (திருமுருகா. 206-212)**

என்கிற செய்யுள் அடிகளின் வழி வெளிப்படுகின்றது.

**முருகனின் பன்னிரு கைகள் சிவந்த வேலும், முதிரா வடிவும்**

முருகப் பெருமான் குற்றமில்லாத வெற்றியையும் ஒருவராலும் அளந்தறியப்படாத நல்ல புகழையும், சிவந்த வேலினையும், முதிரா வடிவையும் உடையவன். இதனை,

**"மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து**
**எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்" (திருமுருகா 60-61)**

எனும் செய்யுள் அடிகள் தெளிவுறுத்துகின்றன.

முருகனின் பன்னிரு கைகளின் ஒருகை தேவர்களுக்குப் பாதுகாவலாக உயர்ந்தது, மருங்கில் வைத்தது ஒருகை, துடையின் மேலே ஒரு கை தங்கியது, ஒருகை அங்குசத்தல் யானையைச் செலுத்தியது, இரண்டு கைகள் பரிசையுடன் வேலை வலமாகச் சுழற்றின் ஒருகை மார்போடு சேர்ந்தது

ஒருகை மேலே படைக்கலம் எறிதலால் சூழல, மற்றொரு கை வீரமணியை முழுக்கும், ஒருகை மழையை பெய்ய ஒருகை தெய்வானையார்க்கும் மணமாலை புனையும் என்று நக்கீரர் முருகனது பன்னிரு கைகள் குறித்துக் கூறியுள்ளார். முருகனுக்குப் பன்னிரு கைகள் இருந்தமை,

**“ஆங்கப் பன்னிருகையும் பாற்பட வியற்றி” (திருமுருகா.118)**

என்னும் வரிகளில் தெளிவுறுகின்றது.

**முருகனின் மார்பும் திருமுடியும்**

முருகனின் மார்பினைக் கூற வந்த நக்கீரர் முருகனின் மார்பு பதக்கம், தங்கம் பெற்றது, அழகும் பெருமையும் உடையது, மூன்று வரியாகிய இலக்கணத்தை உடையது என்கிறார். இது,

**“ஆரம் தாழ்ந்த அம்பகட்கு மார்பிற்” (திருமுருகா 104 )**

என்னும் செய்யுள் வரியில் தெரிய வருகிறது. முருகப் பெருமானின் திருமுடியைக் கூற வந்த நக்கீரர் மந்தியும் அறிய முடியாத மலைச்சாரலில் வண்டுகள் மொய்க்காத சுடர் போன்ற சிவந்த காந்தள் மலர்களால் தொடுத்த மாலையைச் சூடிய திருமுடியைச் சூடியவன் என்பதை,

**“மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து**
**துரும்பும் மூசாச் சுடர்ப் பூங் காந்தட்” (திருமுருகா. 42-43 )**

என்ற வரிகளில் விளங்குவதைக் காணும்போது கடவுளருக்குரிய மாலையில் வண்டுகள் மொய்க்காது என்ற செய்தியைப் பெற முடிகிறது.

**முருகனின் ஆடைச் சிறப்பு**

முருகனுடைய உருவச் சிறப்பை எடுத்துரைக்கையில் அவனுடைய ஆடைச் சிறப்பும் கூறப்படுகின்றது. சிவந்த ஆடையன், கச்சினன் என்றும்,

**“குறும்பொறிக் கொண்ட நறுந்தன் சாயல்**
**மருங்கில் கட்டிய நிலனேர்பு துகிலினன்” (திருமுருகா 213-214 )**

எனவும் சித்தரிக்கின்றார். “ஊதர பந்தனத்தில் மேலே உடுப்பதாகக் கொண்டதும், நறிய குளிர்ந்த மென்மையுடையதுமாகிய இடையிலே கட்டப்பட்ட நிலத்தினளவும் தூங்காநின்ற துயில்” என்று தமிழர் தம் இயல்பான ஆடை திருமுருகாற்றுப்படை வழி அறியப்படுகின்றதைக் காணலாம்.

**கடப்பமாலை மார்பினன்**

கார் காலத்தில் முதலில் பெய்த மழையில் தழைத்த பெரிய அடியையுடைய செங்கடம்ப மரத்தில் இருந்து மலர்ந்த தேர்ச்சக்கரம் போன்ற வட்ட வடிவுடைய மலர்களால் கோத்த மாலையை மார்பில் முருகன் அணிந்திருந்தான். இதனை,

**“தலைப்பெயல் தலைஇய தண்நறுங்கானத்து**
**இருள்படப் பொதுளிய புராரை மராஅத்து**
**உருள்பூந் தண் தார் புரளும் மார்பினன்” (திருமுருகா 9-11 )**

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

**“ஆர் வலர் ஏத்தமே வருநிலையிறும்” (திருமுருகா. 221 )**

**அறுபடை வீட்டின் சிறப்பம்சமும் முருகனை வணங்கும் முறையும்**

தன்னிடம் அன்புடையவர் தன்னை வழிபட்டு நிற்பவன் மனதில் விரும்பி உறையும் இடமாகக் கொள்வான். நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்ட முருகனுக்குரிய "ஆறு திருத்தலங்களை" "ஆற்றுப்படை வீடுகள்" என்று அழைந்தனர். அதுவே காலப்போக்கில் ஆறுபடை வீடுகள் என்று மாறிவிட்டது. இசையினை எழுப்பி சிவந்த மலர்களைத்தூவி சிவந்த தினை அரிசியைப் பரப்பி, முருகனை அழைத்து தாம் வேண்டியவற்றைப் பெற்றாற் போன்று மகிழ்ச்சியுடன் வழிபட்டனர்.

**"குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்**
**முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க**
**முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியல்நகர்" (திருமுருகா. 242- 244 )**

**தத்துவக் கருத்து**

திருப்பரங்குன்றில் முருகன் வீற்றிருக்கும் அழகை இயற்கை அழகுடன் எடுத்துக்காட்டும் பகுதியில் அழகிய தத்துவக் கருத்தினையும் புலவர் உள்ளுறுத்தியுள்ளார்.

"இருஞ்சேற்று அகல்வயல் வரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாட் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன்…"**(திருமுருகா. 242- 244 )**

என்பதன் ஊடாக கரிய சேற்றினை உடைய வயலில் விரிந்து மலர்ந்த தாமரை மலரில் இரவெல்லாம் உறங்கி. வைகறைப் போதில் மணம் கமழ்கின்ற நெய்தல் மலரில் தேனை உண்டு. சூரியன் தோன்றிய பின்னர் அழகிய சுனைப் பூக்களை நாடும் அழகிய வண்டுக்கூட்டம் ஆரவாரிக்கின்ற வளம் நிறைந்த திருப்பரங்குன்றம் என்பதில்; செந்தாமரையில் தேன் பருகச்சென்ற வண்டு அதில் திளைத்துக் கிடந்தபோது தாமரை மலர் மூடிக்கொண்டது. இரவெல்லாம் அதில் சிக்கிக்கிடந்து பொழுது புலர்ந்ததும் தாமரை கட்டவிழ்ந்து கொள்ள அவ்வண்டு வெளியேறியது. இக்காட்சியானது உயிர்கள் அறியாமை என்னும் சேற்றில் பிணிப்புண்டு நிற்க அவனருளால் அத்தளையில் இருந்து நீங்குவதுபோல இருந்தது. இதனை "சிறந்த தத்துவக் கருத்தொன்று வண்டின்மேல் வைத்துப் புலப்படுத்தப்படுகிறது." என துரை அரங்கசாமி குறிப்பிடுவார்.

**வீடுபேற்றுக்கு வழிகாட்டுதல்**

முருகனை எங்கு காண்பேன் என வினவியவனுக்கு முருகன் உறையும் ஆறுபடை வீடுகளையும் கூறி வீடுபேறு பெறுவதற்கு வழிப்படுத்துதல் திருப்பரங்குன்றம் என்ற முதலாவது பகுதியில்

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்இ
செலவுநீ நயந்தனை ஆயின்இ பலஉடன்

நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" **(திருமுருகா. 242- 244 )**

என்று முருகனின் திருவடிகளை நினைத்து மேன்மையான மனத்தோடு நல்வினைகளைச் செய்யும் கொள்கையோடு செல்பவனே நீ விரும்பினாயானால் வீடுபேறு வாய்க்கப்பெறுவதோடு நீ நினைத்த காரியங்களையும் நல்வினைப் பயனால் அடையப்பெறுவாய் என்று வீடுபேற்றைப் பெறுவதற்கு ஆற்றுப்படுத்தும் செய்தி சொல்லப்படுகிறது.

பழமுதிர்ச்சோலையில் இடம்பெறும் வெறியாட்டு விழாவினை விபரித்து குறித்த இடங்களில் நீ முருகப்பெருமானைக் கண்டால் செய்யவேண்டியவை யாவை எனவும் கூறி அனுப்புகிறான். நீ முருகனைக் கண்டவுடனேயே முகத்தாலே விரும்பி நோக்கி வாயாலே புகழ்ந்து வாழ்த்தி கையைத் தலைமேல் குவித்து தொழுது அவன் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி அக்கடவுளைப் பலவாறு துதித்து வழிபடவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். அதன்போது முருகன் சரவணப் பொய்கையில் தோன்றியது முதல் சூரனைக் அழித்தது வரையிலான முருகனின் சிறப்புக்கூறி வணங்கவேண்டும் என்று கூறுகிறார். அப்போது அங்கு செவிப்போரும் முருகனிடம் உன்னைப் பற்றிக் கூறுவர். முருகக்கடவுள் வீடுபேறு பெறக்கருதி வந்த உனது வருகையை முன்னரே அறிவேன் அஃது உனக்கு எய்துதல் அரிதல்ல.' என்றுகூறி வீடுபேறு தந்து அருள்வான் என்றும் புலவரை வழிப்படுத்துகிறார்.

**முடிவுரை**

முருகனைத் தம் நெஞ்சத்தில் எழுந்தருளி இருக்குமாறு வேண்டி நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை என்னும் சிறந்த நூலை ஒருவன் தன் மனத்தை ஒருமுகம் ஆக்கி நாள்தோறும் ஓதி வந்தால் தலைமை பொருந்திய அழகும் பெருமையும் வாய்ந்த முருகக் கடவுள் அவன் முன்னே தோன்றி அவன் விரும்பிய பயன் யாவற்றையும் அருளுவான் என்பதை,

**"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்**
**தற்கோல நாடோறும் சாற்றினால் முற்கோல**
**மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்**
**தான் நினைத்த எல்லாம் தரும்"**

என்னும் வெண்பா எடுத்துரைக்கிறது.

திறவுச்சொற்கள் - **சேயோன் மேய மைவரை உலகமும் - கடப்பமாலை மார்பினன் -** சிவந்த ஆடையன்- முதிரா வடிவன்-

**துணைநூற்பட்டியல்**

1. மோகன், இரா., (உரையாசிரியர்), (2004) பத்துப்பாட்டு – மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.- வீடுபேறு- அறுபடை வீடுகள்
2. ஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ., (நச்சினார்க்கினியர் உரைக் கருத்தைத் தழுவிச் செய்த புத்துரை), (2011) திருமுருகாற்றுப்படை, வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம், கனடா.
3. நாராயண வேலுப்பிள்ளை, (1994) பத்துப்பாட்டு – தெளிவுரையுடன், முல்லை நிலையம், சென்னை.